இயேசு ஜீவிக்கிறார் சுவிசேஷ ஊழியத்தின்

# வளரும் செடி

ஆண்டு சந்தா ரூ.25 தனிப்பிரதி ரூ.3

மலர் 17 ஆகஸ்ட் –2026 மணம் 5



# இதயந்திறந்து

## கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

கிறிஸ்துவில் பிரியமானவர்களே,

இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். இரட்கர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். நம்மை நேசிக்கின்ற ஆண்டவர், நம்மையும் பிள்ளைகளையும் இம்மட்டும் நடத்திவருகின்ற கிருபைகளை நினைத்து அவரைத் துதிப்போம்.

தேவைகளும் எதிர்பார்ப்புகளும் நிறைந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கர்த்தர் ஒருவரே அவைகளை அறிந்து நேர்த்தியாக நிறைவேற்றுகிறவராயிருக்கிறார். நமது விருப்பங்களை அவரிடத்தில் கொண்டு வருவோம். அவர் ஜெயமாய் நடத்துவார்.

நமது மிஷனரி பணித்தளங்களுக்காவும் அங்கு நடைபெறுகின்ற சகல பணிகளுக்காகவும் தேவனைத் துதிப்போம். விசுவாசிகள் கர்த்தருக்குச் சாட்சியாக நிரூபமாக ஜீவிக்கும்படியாக ஜெபிப்போம். பாரம்பரியக் கட்டுகளிலிருந்து விடுதலையாகி கர்த்தருக்கு சாட்சியாக ஜீவித்திட ஜெபிப்போம். உங்கள் ஜெபத் தேவைகளையும் மனதின் விருப்பங்களையும் ஸ்தோத்திரத்துடன் கர்த்தருக்குச் சொல்லுங்கள். அவர் ஒருவரே காரியங்களைச் ஜெயமாக நடத்தித் தருபவர். அவரிடம் கொடுக்கின்ற காரியங்கள் மகிமையாகவே, மேன்மையாகவே முடியும். கர்த்தரின் நன்மை தாமதமானால் அதற்கு அமைதியாய்க் காத்திருங்கள். அது ஏற்றவேளையில் நன்மையாகவே நடக்கும்.

எங்களுக்காகவும் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள் ஜெபிக்க ஜெப விண்ணப்பங்களை தெரியப்படுத்துங்கள். நாமும் இணைந்து ஜெபிப்போம். கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். உங்களுக்காகவும் ஜெபிக்கிறோம்.

தேவ கிருபை நம்மில் பெருகுவதாக!

ஜெபத்துடனும் அன்புடனும்

**சகோ. ஜான் M. ஜெயராஜ்**

## இயேசு பாதத்தில் ஓர் நாள் - 2026

இடம்: **ப்ரிபுரம் பணித்தளம் (ராதாபுரம்)**

நாள்: **ஆகஸ்ட் 15** (சனிக்கிழமை)

நேரம்: **காலை 10:30 மணி**

நற்செய்தியாளர்:

**Pr. பால் அடைக்கலம்,** வள்ளியூர்.

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!

இடம்: **ஜீவபுரம் (களக்காடு)**

நாள்: **ஆகஸ்ட் 29** (சனிக்கிழமை)

நேரம்: **காலை 10:30 மணி**

நற்செய்தியாளர்:

சகோ. **T. பன்னீர் செல்வம்,** சண்முகபுரம்.

தொடர்புக்கு: சகோ. ஜான் M. ஜெயராஜ்

செல்: 94431 13292

**மன்னா:**

# ஒட்டவைக்கிற கர்த்தர்

**மறுபடியும் ஒட்டவைக்கிறதற்குத் தேவன் வல்லவராயிருக்கிறாரே...**
**(ரோம. 11:23)**

கிறிஸ்துவில் பிரியமானவர்களே,

நான் மறுபடியும் உன்னை கட்டுவிப்பேன். நீ கட்டப்படுவாய் என்ற இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். ஒவ்வொரு மாதமும் கர்த்தர் தமது மன்னாவினால் நம்மைப் போஷிக்கிறார் அவைகளுக்குப் பாயும் தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்க்கிறபடியினால் மாதந்தோறும் புதுக்கனிகளைக் கொடுத்துக்கொண்டே இருக்கும்.

கடந்த மாதத்தில், “கர்த்தர் சொன்னதைச் செய்கிறவர்” எனும் தலைப்பீன் கீழாக கர்த்தர் நம்மோடு பேசினார். நீங்களும் வார்த்தையினால் உண்டாகிற விடுதலையை அனுபவித்திருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். சிலர் கர்த்தர் தங்களோடு பேசின அனுபவத்தை பகிர்ந்து கொண்டு, தேவனை மகிமைப்படுத்தினார்கள். நீங்களும் பெற்றுக்கொள்ளுகிற நன்மைகளை சாட்சியாகப் பகிர்ந்து, தேவனுக்கு மகிமை செலுத்துங்கள்.

இந்த மாதத்திலும், “ஒட்ட வைக்கிற கர்த்தர்” எனும் தலைப்பீன் கீழாக நம்முடன் பேசும்படி கர்த்தர் வந்திருக்கிறார். கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரை கண்ணோக்கினார் என்றும் எல்லோரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டுப் போனார்கள். நன்மை செய்கிறவன் இல்லை. ஒருவனாகிலும் இல்லை. தங்கள் வழிகளை தாங்கலே கோணலாக்கிக் கொண்டார்கள். அவரவர் தங்கள் மனம் போன போக்கில் நடந்ததினால் குடும்பங்கள், ஊழியங்கள் உடைந்து, சிதைந்து கிடக்கிறது. தங்களுக்குத் தாங்களே கேடு உண்டாக்கிக் கொண்டார்கள்.

பரலோகத்திலிருந்து இதைக் கண்ணோக்கின கர்த்தர் பிரிந்து போன குடும்பங்களையும், பிரிந்து போன உறவுகளையும், ஊழியங்களையும் ஒட்டவைக்க, இணைக்க வந்திருக்கிறார். இவர்கள் தானாக இணையவோ, இணைக்கப்படவோ விரும்ப மாட்டார்கள். ஆனால் கர்த்தரோ இவர்களை இணைப்பதற்கு, ஒட்டவைப்பதற்குச் சித்தமுள்ளவராயிருக்கிறார். அதற்காகவே நம்மைத் தேடிவந்திருக்கிறார். உங்களால் இது கூடாததுதான். தேவனால் எல்லாம் கூடும். அவரின் சித்தத்திற்கு இடம் கொடுப்பீர்களானால் காரியங்கள் நன்மையாகவே முடியும்.

வேரானது பரிசுத்தமாயிருந்தால் கிளைகளும் பரிசுத்தமாய் இருக்கும். சில கிளைகள் முறித்துப் போடப்பட்டிருக்க, காட்டொலிவமரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டு ஒலிவ மரத்தின் வேருக்கும், சாரத்திற்கும் பங்காளியா இருப்பதினாலும் நீ வேரைச் சுமக்காமல், வேர் உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக்கொள்.

சுபாவக் கிளைகளைத் தேவன் தப்பவிடாதிருக்க, உன்னையும் தப்பவிடமாட்டார் என்று எச்சரிக்கையாயிரு. ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார். விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும். உன்னிடத்தில் தயவையும் காண்பித்தார் அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டு போவாய். அன்றியும் அவர்கள் அவிசுவாசத்திலே நிலைத்திராதிருந்தால்

அவர்களும் ஒட்டப்படுவார்கள்; அவர்களை மறுபடியும் ஒட்டவைக்கிறதற்குத் தேவன் வல்லவராயிருக்கிறாரே.

அன்பு நேசப்பிள்ளைகளே, பிரிந்து போன, விலகி, விரிந்து போன குடும்பங்களை, உறவுகளை மற்றும் பல. ஒட்ட வைப்பதற்கு தேவன் வல்லவராயிருக்கிறார். ஜெபத்துடன் தொடருங்கள். கர்த்தர் இயேசு நம்முடன் பேசுவாராக!

# 1. பிரிந்த உறவுகள்.

**கர்த்தர் யாக்கோபை நோககி: உன் பிதாக்களுடைய தேசத்திற்கும், உன் இனத்தாரிடத்திற்கும் நீ திரும்பிப் போ; நான் உன்னோடே கூட இருப்பேன் என்றார்... ஆதி. 31:3)**

யாக்கோபைத் தகப்பன் ஆசீர்வதித்ததினிமித்தம் ஏசா யாக்கோபைப் பகைத்து; என் தகப்பனுக்காகத் துக்கிக்கும் நாட்கள் சீக்கிரமாய் வரும், அப்பொழுது என் சகோதரனாகிய யாக்கோபை கொன்று போடுவேன் என்று ஏசா தன் இருதயத்தில் சொல்லிக்கொண்டான்.

ஏசாவின் வார்த்தைகள் ரெபெக்காளுக்கு அறிவிக்கப்பட்டபோது அவள் யாக்கோபைக் கூப்பிட்டு, ஏசா உன்னை கொன்றுபோட நினைத்து தன்னைத் தேற்றிக் கொள்ளுகிறான். ஆகையால் நீ எழுந்து புறப்பட்டு, ஆரானிலிருக்கிற என் சகோதரனாகிய லாபானிடத்திற்குப் போய் தங்கியிரு. ஏசாவின் கோபம் தனிந்தபின், நான் ஆள் அனுப்பி, உன்னை அழைப்பிப்பேன் என்றாள். அதன்படி யாக்கோபு புறப்பட்டு தன் மாமன் வீட்டுக்குப் போனான்.

யாக்கோபு தன் மாமன் வீட்டில் ராகேலுக்காக ஏழு வருஷம் பின் லேயாளினிமித்தம் ஏழு வருஷம், அதன்பின்பு, இன்னும் ஏழு வருஷம் ஜீவித்து, பிள்ளைகளையும் ஆடுமாடுகளையும் சம்பாதித்தான். லாபானின் குமாரர்: எங்கள் தகப்பனுடைய மந்தையினாலும், பொருளினாலும், யாக்கோபு இந்தச் செல்வத்தையெல்லாம் அடைந்தான் என்று சொல்லும் வார்த்தைகளை யாக்கோபு கேட்டான். அதைத் தொடர்ந்து, லாபானின் முகம், நேற்று முந்தைய நாளில் இருந்தது போல் இராமல், வேறுபட்டிருக்கக் கண்டான். கர்த்தரும் இதைக் கண்டதினால், யாக்கோபை நோக்கி: நீ எழுந்து புறப்பட்டு, உன் ஜென்ம தேசத்திற்கும், உன் இனத்தாரிடத்திற்கும் போ என்றார். அதின்படி யாக்கோபு தன் மனைவி, பிள்ளைகள், மந்தை யாவற்றோடும் புறப்பட்டான்.

யாக்கோபு பிரயாணப்பட்டு வருகையில், தன் சகோதரனாகிய ஏசாவினிடத்திற்கு, தன் ஆட்களை அனுப்பி, உம்முடைய சகோதரனாகிய யாக்கோபு எங்களை அனுப்பினான் என்று சொல்லச் சொன்னான்.

அந்த ஆட்கள் யாக்கோபினிடத்திற்குத் திரும்பிவந்து நாங்கள் உம்முடைய சகோதரனிடத்துக்குப் போய்வந்தோம். இதோ, அவனும் நானூறு பேரோடே உம்மை எதிர்கொள்ள வருகிறான் என்றார்கள். யாக்கோபு மிகவும் பயந்து, வியாகுலப்பட்டு, கர்த்தரை நோக்கி: நீ உன் தேசத்திற்கும், உன் இனத்தாரிடத்திற்கும் திரும்பி போ என்று சொன்ன கர்த்தாவே,

என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும், அவன் வந்து என் பிள்ளைகளையும் தாய்மார்களையும் முறிய அடிப்பான் என்று அவனுக்கு நான் பயந்திருக்கிறேன். தேவரீரோ: நான் உனக்கு மெய்யாகவே நன்மை செய்து, உன்

சந்ததியை எண்ணி முடியாத கடற்கரை மணலைப்போல மிகவும் பெருகப் பண்ணுவேன் என்று சொன்னீரே என்றான்...(ஏசா. 32:11,12)

யாக்கோபு, அன்று ராத்திரியிலே அங்கு தங்கி, தன் சகோதரனாகிய ஏசாவுக்கு வெகுமானாமாக, "வெள்ளாடு, மாடு, ஒட்டகம் என தனித்தனியாக வகைவகையாக பிரித்தெடுத்து வெகுமானமாக அனுப்பினான். முன்னே வெகுமதியை அனுப்பி, அவனைச் சாந்தப்படுத்திக் கொண்டு, பின்பு அவன் முகத்தைப் பார்ப்பேன் என்றான்."

யாக்கோபு தன் கண்களை ஏறெடுத்து, இதோ, ஏசாவும் அவனோடே கூட நானூறு பேரும் வருகிறதைக் கண்டு, தான் முன்னாக நடந்து போய், ஏழுவிசை தரைமட்டும் குனிந்து வணங்கி, தன் சகோதரன் கிட்டச் சேர்ந்தான். அப்பொழுது ஏசா எதிர்கொண்டு ஓடி வந்து, அவனைத் தழுவி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முந்தஞ்செய்தான். இருவரும் அழுதார்கள். யாக்கோபின் மனைவிகளும், பிள்ளைகளும் வந்து வணங்கினார்கள்.

**ஏசா யாக்கோபை நோக்கி: நாம் புறப்பட்டுப் போவோம்**

**வா, நான் உனக்கு முன் நடப்பேன் என்றான்.(ஆதி. 35:12)**

அன்பு நேசப்பிள்கைளே! பிரிந்த உறவுகளை ஒட்டவைத்தார். அதே, கர்த்தர் உங்கள் குடும்பத்திலும் பிரிந்த உறவுகளை ஒட்டவைக்க வந்திருக்கிறார். நீங்கள் இசைந்து, இணங்கி, தாழ்மைப்படுவீர்களானால் அற்புதங்களைப் பெற்றுக் கொள்வீர்கள்.

## 2. பிரிந்த குடும்ப உறவு

**சகோதரர்கள் யோசேப்பைக் அந்த குழியிலிருந்து தூக்கியெடுத்து, அவனை இஸ்மவேலர் கையில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். அவர்கள் அவனை எகிப்து தேசத்துக்குப் கொண்டு போனார்கள். (ஆதி. 37:28)**

**யோசேப்பு தன் இரதத்தை ஆயத்தப்படுத்தி, அதின்மேல் ஏறி, தன் தகப்பனாகிய இஸ்ரவேலைச் சந்திக்கும்படி போய், அவனைக் கண்டு, அவனுடைய கழுத்தைக் கட்டிக் கொண்டு, வெகுநேரம் அவன் கழுத்தை விடாமல் அழுதான்... (ஆதி. 46:29)**

யோசேப்பு பதினேழு வயதினிலே, தன் சகோதரனுடனே ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். அவர்களுடைய துன்மார்க்க செயல்களைத் தகப்பனிடத்தில் சொல்லிவருவான். யாக்கோபு தன் முதிர்வயதில் யோசேப்பை பெற்றதினால், அவனை அதிகமாய் நேசித்து அவனுக்கு ஒரு பலவருண அங்கியைச் செய்வித்தான். அவன் சகோதரரோ அவனுடன் பட்சமாய்ப் பேசாமல் அவனைப் பகைத்தார்கள்.

யோசேப்பு இரண்டு சொப்பனங்கண்டு, அதை அவர்களிடத்தில் சொன்னான். அதினிமித்தம் இன்னும் அதிகமாக அவனைப் பகைத்தார்கள். தகப்பனாகிய யாக்கோபு, யோசேப்பை, சீகேமிலே ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிற சகோதரர்களைப் பார்த்து வரும்படி அனுப்பினான். அவன் போன இடத்தில், சகோதரர்கள் அவனைப் பிடித்து வியாபாரிகளான இஸ்மவேலரிடத்தில் விற்றுப்போட்டார்கள். அவர்கள் அவனை எகிப்துக்குக் கொண்டு போனார்கள். யோசேப்பின் அங்கியில் ஆட்டு இரத்தத்தை தெளித்து, அவனைத் துஷ்டமிருகம் பட்சித்துப்போட்டது என்று தகப்பனிடத்தில் சொல்லிவிட்டார்கள். யாக்கோபு, தன் குமாரனுக்காகத் துக்கித்துக் கொண்டிருந்தான்.

யோசேப்புக்குச் சொப்பனத்தைக் கொடுத்தவர், பல போராட்டங்களுக்கும், சோதனைகளுக்கும் மத்தியில் அவனை எகிப்தின்அதிபதியாக்கினார். யோசேப்பு, எகிப்திலே பார்வோனுக்கு அடுத்த ஸ்தானத்தில் அதிபதியாக உயர்த்தப்பட்டான். இப்போது யோசேப்புக்கு வயது முப்பது.

சகல தேசங்களிலும் பஞ்சம் கொடியாதாயிருந்தது. யோசேப்பு, எகிப்து ஜனங்களுக்குத் தானியங்களைக் கொடுத்தபடியினால், சகல தேசத்தார்களும் யோசேப்பினிடத்தின் எகிப்துக்கு வந்தார்கள். கானானிலே பஞ்சம் உண்டாயிருந்தபடியால், எகிப்துக்குத் தானியம் வாங்க போகிறவர்களுடனே யாக்கோபின் குமாரரும் போனார்கள். அவர்கள் யோசேப்பின் முன்பாக வந்து, முகங்குப்புறத் தரையிலே விழுந்து அவனை வணங்கினார்கள். யோசேப்பு அவர்களைப் பார்த்து, தன் சகோதரர் என்பதை அறிந்து கொண்டான். அவர்கள் யோசேப்பை அறியவில்லை.

முதல்முறை தானியம் கொடுத்தனுப்பிய யோசேப்பு, இரண்டாவது முறை தன் தம்பி பென்யமீனை அழைத்து வரச் சொன்னான். இப்போது யோசேப்புக்கு வயது முப்பத்தொன்பது (39) சுமார் இருபத்திரெண்டு வருடங்களுக்குப் பிறகு தன் சகோதரரைச் சந்திக்கிறான். நான்தான் உங்கள் சகோதரனாகிய யோசேப்பு என்று தன்னை வெளிப்படுத்துகிறான். (ஆதி. 45:3,4) இந்தச் செய்தியை தகப்பனாருக்கு அறிவித்து, அவரை அழைத்துவரச் சொல்லுகிறான். சகோதரர்கள் போய், தகப்பனை அழைத்து வரும்போது, யோசேப்பு எதிர்கொண்டுபோய், அவனைக் கண்டு, அவனுடைய கழுத்தைக் கண்டிக்கொண்டு, வெகுநேரம் அழுதான். பிரிந்த குடும்பத்தை ஒட்ட வைத்தார்.

அன்புநேசப்பிள்ளைகளே, நான் பிறந்து, சிறுவனாக வளர்ந்தது மலேசியா தேசத்திலே. 1969ல் படிப்பிற்காக நானும் எனது அண்ணனும், தங்கையும் இந்தியாவிற்கு வந்தோம். அதற்குப்பின்னர் மலேசியா தேசத்திற்குப் போகமுடியாதபடி காலங்கள் மாறிவிட்டது. இங்கே இந்திய தேசத்திலே படித்து வேலைப் பார்த்தேன். 1982ல் ஆகஸ்ட் 31ஆம் தேதி தேவன் எனக்குக் கொடுத்த வேலையை விட்டுவிட்டு, கர்த்தருடைய அழைப்பின்படி முழுநேர ஊழியத்திற்கு வந்தேன். 2003– ஆண்டு கர்த்தர் என்னை ஊழிய பாதையிலே முதல் முறையாக மலேசியா தேசத்திற்குக் கொண்டு சென்றார். (அதாவது 34 ஆண்டுகளுக்குப் பின்) எனது அப்பாவின் குடும்பம் (சித்தப்பா, அத்தை) அங்கு உண்டு. யார் யார் இருக்கிறார்கள், யார் யார் இறந்துபோனார்கள் ஒன்றுமே தெரியாது. பிரிந்த குடும்பத்தை ஒட்ட வைக்கிற கர்த்தர் சித்தி பிள்ளைகளையும், அத்தை, பிள்ளைகளையும் சந்திக்கக் கிருபை கொடுத்தார். அன்று பிரிந்த குடும்பம், இன்று இணைந்து, இசைந்து செயல்பட கிருபை செய்த தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

பிரியமானவர்களே, பிரிந்த குடும்பங்களை ஒட்ட வைக்கிற கர்த்தர், உங்கள் குடும்பங்களிலும் அப்படிப்பட்ட நன்மையை செய்து நிறைவேற்ற விருப்பமுள்ளவராக இருக்கிறார். நீங்கள் செய்ய வேண்டிய காரியமாவது:

இப்பொழுது இடங்கொடு... இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்.

## 3. காணாமற்போன உறவுகள்

**இளைய குமாரன், எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான். அவன் தூரத்தில் வரும்போதே, அவன் தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முந்தம்செய்தான்...(லூக். 15:20)**

ஒரு தகப்பனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். அவர்களில் இளையவன்

தகப்பனை நோக்கி: தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான். அந்தப்படி தகப்பன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக் கொடுத்தான், இளைய மகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, தூரதேசம் போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப் போட்டான்.

இளைமகன் குறைவுபடத் தொடங்கினபோது, தேசத்திலுள்ள ஒரு குடியானவனிடத்தில் போய் ஒட்டிக்கொண்டான். குடியானவன் இவனைத் தன் தோட்டத்திலுள்ள பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான்.

இளைய குமாரனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன், என் தகப்பனுடைய கூலிக்காரருக்கு பூர்த்தியான சாப்பாடு கிடைக்கும்போது நான் பசியினால் சாகிறேனே என்றான். அவன் எழுந்து தன் தகப்பனிடத்திற்குப் போனான். அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ் செய்தான். தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி: நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டு வந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்குத் மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள் என்றான். கொழுத்த கன்றை கொண்டு வந்து அடியுங்கள். நாம் புசித்து சந்தோஷமாயிருப்போம். என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான் என்று சொல்லி சந்தோஷப்படத் தொடங்கினார்கள்... காணமற்போன குடும்பம் இணைந்தது.

அன்பு நேசப்பிள்ளைகளே, ஒட்டவைக்கிறவராகிய கர்த்தர் காணாமற் போன குடும்பத்தை ஒட்டவைத்தார். எப்படி இது நடந்தது? " இளைய குமாரனுக்குப் புத்தி தெளிந்தபோது, "என்று (15:17ல்) வாசிக்கிறோம். அப்படியானால் இதுவரைக்கும் புத்தி பிசகினால் நடந்திருக்கிறான் என்பதை அறிய முடிகிறது. மட்டுமல்ல ஒட்ட வைக்கிற கர்த்தர் அவனுக்குள் தகப்பனைக் குறித்த ஓர் எண்ணத்தைக் கொடுத்தவுடன், அவன் அதற்கு கீழ்ப்படிந்திருக்கிறான். வசனத்தைக் கவனியுங்கள்.

**என் தேவன் என் மனதிலே ஒரு எண்ணத்தை உண்டாக்கினார்...(நெகே. 7:5)**

எனக்கன்பானவர்களே, ஒட்டவைக்கிறவராகிய கர்த்தர் தகப்பனுடைய இருதயத்திலும் மகனைக் குறித்த ஓர் எண்ணத்தையும் உண்டாக்கியிருக்கிறார் என்பதை தகப்பனுடைய செயலால் அறிய முடியும். அவைகளைக் கவனியுங்கள்.

**1. 15:20 – மகன் தூரத்தில் வரும்போதே கண்டு ஓடினான்.**

**2. 15:22 – உயர்ந்த வஸ்திரம், மோதிரம், பாதரட்சை**

**3. 15:23 – கொழுத்த கன்று**

**3. 15. 24 – காணாமற்போனான் திரும்பவும் காணப்பட்டான்.**

அன்பு நேசப்பிள்ளைகளே! உங்கள் குடும்பத்திலும் பிரிவினைகள், உண்டாயிருக்கிறதா? ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கக் கூடாதபடி மனவிசாரங்கள் பெருகியிருக்கிறதா? ஒட்டவைக்கிறவராகிய கர்த்தர் உங்களைத் தேடி வந்திருக்கிறார். உங்களால் கூடாது என்பது உண்மைதான். ஆனால் தேவனால் எல்லாம் கூடும். நீங்கள் அவருக்கு இடங்கொடுக்கும்போது அவர் காரியங்களை செம்மையாக முடித்துத் தருவார்.

கடந்து போன, விட்டுப்போன பழையவைகளை நினைத்து, ஐக்கியத்தை, குடும்ப உறவை இழந்து விடாதீர்கள் தேவனுக்கு இடங்கொடுங்கள். அவர் காணமற்போன உறவை இணைத்து ஆசீர்வதித்து மகிழப்பண்ணுவார்.

# 4. மரித்துப்போன உறவு

**இயேசு, லாசருவே, வெளியே வா என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது மரித்தவன் வெளியே வந்தான்...(யோ. 11:43,44)**

இயேசு பெத்தானியா கிராமத்திலுள்ள மார்த்தாள், மரியாள், லாசருவினிடத்தில் அன்பாயிருந்தார். லாசரு வியாதிபட்டபோது, அவனுடைய சகோதரிகள், இயேசுவினிடத்தில் ஆள் அனுப்பி, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான் என்று சொன்னார்கள். அதற்கு இயேசு: இந்த வியாதி மரணத்திற்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது. தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார் என்றார்.

இயேசு தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டு நாள் தங்கி, தம்முடைய சீஷரை நோக்கி: நாம் மறுபடியும் யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள் என்றார். நம்முடைய சிநேகிதனாகிய லாசரு மரித்துப் போனான். அவனிடத்துக்குப் போவோம் வாருங்கள் என்றார். இயேசு வரும்போது அவன் கல்லறையில் வைக்கப்பட்டு நாலுநாளாயிற்றென்று கண்டார்.

இயேசு வருகிறார் என்று மார்த்தாள் கேள்விப்பட்டபோது, அவளுக்கு எதிர்கொண்டு போனாள்; அவள் இயேசுவினிடத்தில் வந்து, ஆண்டவரே, நீங்கள் இங்கே இருந்திரானால் என் சகோதரன் மரிக்க மாட்டான் என்றாள்(11:21) மாரியாளும் இயேசுவினிடத்தில் வந்து அதையே சொல்லுகிறாள். இரண்டு சகோதரிகளும் இயேசு இங்கே இருந்திருப்பாரானால் லாசரு மரித்திருக்க மாட்டான் என்கிறார்கள். மட்டுமல்ல மார்த்தாள் சொல்வதைக் கவனியுங்கள்.

**இப்போதும் நீ தேவனிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை தேவன் உமக்குத் தந்தருள்வாரென்று அறிந்திருக்கிறேன் என்றாள்...(யோ. 11:22)**

இயேசு அவளை நோக்கி: உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார். அதற்கு மார்த்தாள்: உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசி நாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள். இயேசு கல்லறையினிடத்துக்கு வந்தார். இயேசு கல்லையெடுத்துப் போடுங்கள் என்றார். அதற்கு மார்த்தாள், ஆண்டவரே! இப்பொழுது நாறுமே நாளுநாளாயிற்றே என்றாள்.

லாசரு வைக்கப்பட்டிருந்த கல்லறையிலிருந்த கல்லை எடுத்துப் போட்டார்கள். இயேசு தம்முடையை கண்களை ஏறெடுத்து: பிதாவே நீர் எனக்கு செவிகொடுத்தப்படியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். இவைகளைச் சொன்னபின்பு, லாசருவே, வெளியே வா என்று என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது மரித்தவன் வெளியே வந்தான். இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள் என்றார். மரித்துபோன உறவு மீண்டும் குடும்பத்தில் ஒட்டவைக்கப்பட்டது. எத்தனை ஆனந்தம்.

அன்பு நேசப்பிள்ளைகளே! உங்கள் குடும்பத்திலும் இப்படிப்பட்ட கைவிடப்பட்ட நிலையிலிருப்பவர்களை ஒன்றிணைக்க இயேசு வந்திருக்கிறார். மனுஷரால் கூடாதது தான். என்றாலும் தேவனால் எல்லாம் கூடும். தேவனால் கூடாதது ஒன்றுமில்லை. விசுவாசத்துடன் நன்மையை எதிர்பாருங்கள். கர்த்தரிடத்தில் பெரிய காரியங்களைப் பெற்றுக்கொள்வீர்கள். ஆமென்! அல்லேலுயா!!

**காணத்தவறாதீர்கள்!**

## TCCL - TV சேனலில் நமது நிகழ்ச்சிகள்

| | TCCL NO: | தொலைக்காட்சி | கிழமைகள் | நேரம் |
|---|---|---|---|---|
| 1 | 170 | ஜீவன் காஸ்பல் TV | சனி | இரவு 9:30 – 9:45 |
| | | | ஞாயிறு | மதியம் 2:02 – 2:20 |
| 2 | 177 | மகிமை TV | செவ்வாய் | இரவு 8:30 – 8:45 |
| | | | சனி | இரவு 8:30 – 8:45 |
| 3 | 600 | நம்பிக்கை TV | சனி | காலை 6:45 – 7:00 |
| 4 | 730 | ஜெயம் TV | ஞாயிறு | இரவு 8:30 – 8:45 |
| 5 | 737 | அதிசயம் TV (Adhisayam TV) | வியாழன் | இரவு 9:30 – 9:45 |
| | | | சனி | காலை 8:30 – 8:45 |
| 6 | | JTK TV- யில் | திங்கள் | இரவு 8:30 – 8:45 |
| 7. | கன்னியாகுமாரி மாவட்டத்தில் **வசனம்** TV- யில் தினமும் இரவு 7:30 | | | |

## ஜெப சேனை ஜெபக் குறிப்புகள் [ஆகஸ்ட் 2026]

**1.** மத்திய, மாநில ஆட்சியாளர்கள், அதிகாரிகளுக்காக...
**2.** தேசத்தின் பாதுகாப்புப்படை அதிகாரிகள், வீரர்களுக்காக...
**3.** மத்திய, மாநில அரசுகளின் இணைந்த, இசைந்த செயல்பாடுகளுக்காக...
**4.** பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைவர்களுக்காக...
**5.** ஆசிரியர்கள், மாணவ, மாணவியருக்காக...
**6.** தனிமனித சுதந்திரம் பாதுகாக்கப்பட...
**7.** அரசாங்கத்தின் சலுகைகள் மக்களுக்குச் சீராகக் கிடைத்திட...
**8.** கொலை, கொள்ளை, கடத்தல்,... இவைகள் தடுக்கப்பட...
**9.** நமது இயேசு ஜீவிக்கிறார் ஊழியர்கள், ஊழியங்கள், விசுவாசிகளுக்காக...
**10.** நமது ஜெப சேனை, TV நிகழ்ச்சிகள், பத்திரிக்கை, புத்தக ஊழியங்களுக்காக...





## நடப்புச் செய்திகள்



1. அமெரிக்கா, ஈரான் நாடுகளுக்கிடையே அமைதி வேண்டும்.
2. ரஷ்யா, உக்ரைன் யுத்தம் நடந்து கொண்டுதான் இருக்கிறது.
3. டெல்லியில் மாணவர்கள் போராட்டம்.
4. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் பேச அனுமதிக்கப்படுவதில்லை.
5. பழனியில் முறைகேடாகப் பத்திரப்பதிவு.
6. நீட் வினாத்தாள் கசிவு குறித்து விவாதம்.

மகனுக்கு சுதந்திரம். (மத். 7:21) ➠

# தேவன் இப்படியும் பேசுவாரா!

## 1. துணிவாயிரு, துணிகரமாயிராதே!!

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! ஒரு காரியத்தை ஜெயமாக முடிப்பதற்கு தேவையானது துணிவா? அல்லது துணிகரமா? என்றார்கள். அதற்கு நேசர், "என்பிள்ளையே! எந்தவொரு காரியத்தையும் செய்வதற்குத் துணிவு அவசியம். ஆனால் அது துணிகரமாக மாறும்போது, ஆபத்தையும், நஷ்டத்தையும் ஏற்படுத்துவதற்கு வாய்ப்புகள் அதிகம். எனவே துணிவாயிரு, துணிகரமாயிராதே" என்றார்.

**உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்...(எபி. 10:35)**

## 2. சந்தேகம் உன்னை அழிக்கும் கிருமி!

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! எந்தக்காரியத்தைச் செய்தாலும், அதில் சந்தேகக் கேள்வி வருகிறதே! ஏன் என்று ஜெபித்தார்கள். அதற்கு நேசர், "என்பிள்ளையே! கேள்விகள் வருவது தவறல்ல, அதனுடன் இணைந்து சந்தேகம் வருவதுதான் ஆபத்து. அது நமது விசுவாசத்தைக் கெடுத்துவிடுகிற கிருமியாகும்." என்றார்.

**சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்... (யாக்..1:16)**

## 3. எதிர்ப்புத் தன்மையை விட, சகிப்புத்தன்மை நல்லது

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! மற்றவர்கள் சொல்லும் கருத்துக்களை, ஏற்றுக்கொள்வதைவிட, எதிர்க்கும் தன்மை உண்டாகிறதே ஏன்? என்றார்கள். அதற்கு நேசர், "என்பிள்ளையே! மற்றவரின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால், எதிர்ப்புத்தன்மையையும் ஏற்றுக்கொள்ள முடிந்தால் சகிப்புத்தன்மையும் உண்டாகும். நீ ஏற்றுக்கொள்ளும் விதத்தில்தான் அது இருக்கும்" என்றார்.

**உபத்திரவங்களை சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோம்... (அப். 27:44)**

# தூண்டில்

கிறிஸ்துவில் பிரியமானவர்களே! விடைகளை வெள்ளைத் தாளில் எழுதி, வருகிற 20ஆம் தேதிக்குள் எனக்குக் கிடைக்கும்படியாக அனுப்புங்கள். கடைசி இரண்டு கேள்விகளும் **மீகா – மல்கியா** புஸ்தகங்களுக்கிடையே உள்ளது.

**ஆகஸ்ட் 2026** **தூண்டில் போடுங்கள், வலை (Internet) விரிக்காதீர்கள்.**

1. நீ குற்றமற்று நீங்கலாயிருப்பாயோ – என்றது யார்?
2. எது அவர்களைத் தாங்கக் கூடாததாயிருந்து?
3. யாரை மரத்திலே தொங்கக் கண்டேன்?
4. பகையாளியாகவும் இருக்கிறான் – யார்?
5. நான் உங்களை வழிநடத்துவேன் – என்றது யார்?
6. அது அவனுக்கு வரும் – எது?
7. எதின்மேல் ஏற ஆயத்தமாயிருந்தீர்கள்?
8. என்னை விட்டுவிடும் – என்றது யார்?
9. நமக்கு இப்படிச் செய்தது என்ன – என்றது யார்?
10. நான் உங்களுக்கு எதுவாயிருப்பேன்?
11. உன்னை வேடிக்கையாக்கி போடுவேன் – என்றது யார்?
12. யார் என்னை கேட்டருளுவார்?

## 2026 ஜூலை மாத மீன்கள்

1. எசே. 39:29 – என் முகத்தை
2. அப். 8:24 – சீமோன்
3. சங். 106:36 – விக்கிரகம்
4. 1சாமு. 14:33 – சவுல்
5. உபா. 2:4 – கர்த்தர்
6. ஓசி. 12:14 – எப்பிராயீம்
7. 2நாளா. 35:6 – பஸ்கா
8. யோபு 6:21 – யோபு
9. 2இரா. 18:20 – செய்தியை
10. எரே. 49:11 – உன் விதவைகள்
11. ஆமோஸ் 4:3 – கர்த்தர்
12. தானி. 7:10 – அக்கினி நதி

## 2026 ஜூலை மாதம் மீன் பிடித்தவர்கள்

01. Mrs. ஜேன் தர்மராஜ் – பாக்கியநாதபுரம்
02. Mrs. ஹெலன் சுவிட் – டோனாவூர்.
04. Mrs. ஷெர்லி சாம் – அரக்கோணம்.
05. Mrs. சுசிலா ஜெயக்குமார் – அரக்கோணம்..
06. Mrs. லாய்ஸ் ஜான் – பணகுடி.
07. Mrs. அன்னத்தாய் ஆல்பட் – மெஞ்ஞானபுரம்.
08. Mrs. அன்னபாக்கியம் தினகரன் – மதுரை.
09. Mrs. செல்வி ஜேக்கப் – தென்காசி.
10. Mrs. ஜெயந்தி விக்டர் – ஒசூர்
11. Mrs. ஜான்சி சந்தியா – மருதகுளம்.
12. Sist. அலிஸ் குணசீலி – சாயர்புரம்.

## 2026 ஜூலை மாதம் மீன் பிடிக்க பிரயாசப்பட்டவர்கள்

01. Mrs.D. ஜெபக்குட்டி மோசஸ் – மருதகுளம்.
02. Mrs. ரோஸ்லின் கனகராஜ் – ஓடக்கரை.
03. Mrs. J. ஜான்சி – ஆனைமலை.

Date of Publication : 01.08.2026



# இயேசு ஜீவிக்கிறார் வெளியீடுகள்

தேவ கிருபையினால் பாடல் CD–க்களும், புத்தகமும் வெளியிடக் கர்த்தர் உதவி செய்தார். ஜீவ கீதங்கள் பாடல்களும் மற்றும் புதிய புத்தகங்களும் வெளியிடப்பட்டுள்ளது. ஜெபத்துடன் பெற்று பயனடையுங்கள்.

**பதிவுத் தபால் அனுப்பிட செலவு தனி**

1. ஜீவ கீதங்கள் (ACD) (Vol : 1 to 24)
2. ஜீவ கீதங்கள் (VCD), MP3
3. கேட்கும் கிருபை
4. ஜீவ கீதங்கள் (220 + 35 பாடல்கள்)
5. தேவன் இப்படியும் பேசுவாரா! (Part 1-8)
6. நோவாவின் பேழை
7. வளரும் செடி
8. மனிதன்
9. வெற்றியுள்ளவன்
10. முதலாம் அற்புதம்
11. வாபனே நீ யார்?
12. என் இருதயத்திற்கு ஏற்றவனான தாவீது
13. ஜலத்தினின்று எடுக்கப்பட்டவன்
14. தேவன் தெரிந்த நாகமான்
15. ஊழியரே இது உங்களுக்காக (50 செய்திகள்)
16. டோனாவூரம்மா
17. நான் கண்ட சகேயு
18. ஜீவ விதைகள் (150 பிரசங்க குறிப்புகள்)
19. நகோமி
20. அந்த ராத்திரியிலே...

**JOHN M. JEYARAJ,**
178, Dohnavur Road, Mavadi - 627 107
Tirunelveli Dist., S. India
Phone : (04635) 210 691, Cell : 94431 13292
E-mail : yesujeevikkirar@gmail.com, Website : www.jesuslivesministries.in

Book Post

To

Owned & Published by : John M. Jeyaraj From 123-A, Dohnavur Road, Mavadi - 627107 - Tirunelveli District. Printed by Mr. S. Jairus Ponniah at Swarnapriya Printers, 35/16-A, Tiruchendur Road, Palayamkottai. Tirunelveli Dt. - 627 002. Editor : John M. Jeyaraj